தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவராண்டு - 2029 வெகுதான்ய

சித்திரை

துணர் : 72] மே - 1998 [மலர் : 1

தமிழ்ப்பொழில்

பதிப்பாசிரியர் : *பாவலர்.ச.பாலசுந்தரம்*

உள்ளுரை

1. புத்தாண்டு வாழ்த்தும்,
புதிய மாற்றத்திற்கு வேண்டுகோளும் 1

2. தஞ்சையில் பௌத்தம்
பா.ஜம்புலிங்கம் 3

3. உத்தி நோக்கில் அப்பர் போற்றும் கண்ணப்பர்
முனைவர்.தா.ஈசுவரப்பிள்ளை 9

4. மங்கல மடந்தை மாதவி (வரலாறு)
பாவலர்.ச.பாலசுந்தரம் 17

5. சங்க காலத்தில் கைம்மை
வ.கிருஷ்ணன் 21

6. சித்தாந்த நூல்களில் ஒட்டணி
முனைவர்.ச.நடாசன் 31

7. சிவலோகம், வைகுண்டம் உண்மையே !
முனைவர்.சு.சௌந்தரபாண்டியன் 35

8. திருவள்ளுவர் ஒரு சட்ட நிபுணர்
வி.கார்த்திகேயன் 37

தமிழ்ப் பொழில் கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ. 5.00	ரூ. 10.00
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60.00	ரூ. 120.00
வாழ்நாள் கட்டணம்	ரூ. 500.00	ரூ. 1000.00

வேண்டுகோள்

தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப்பெறுகின்றன. கட்டுரைகள் ஆறு பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருக. இருவரி இடைவெளியிட்டு, தட்டச்சிட்டு இருபடிகள் அனுப்புக. வெளியிடப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா.

தமிழ்ப்பொழில்

புத்தாண்டு வாழ்த்தும் புதிய மாற்றத்திற்கு வேண்டுகோளும்

தமிழ்ப்பொழில் அன்பர்களே ! அறிஞர் பெருமக்களே ! கரந்தைத் தமிழ்ச் சங்கச் சார்பில் அனைவர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்தினை வழங்கி மகிழ்கின்றோம்.

பயிர்வளம் பெருக்கும் பாங்கமை பெயர் தாங்கும் இவ்வெகுதான்ய ஆண்டில் தமிழ்ப்பொழில் தன் எழுபத்து இரண்டாம் அகவையைத் தொடங்குகின்றது. சங்கத்தின் சீரிய பணிகளுள் சிறப்புடையதாகத்திகழும் இத்தமிழாராய்ச்சித் திங்களிதழை உறுப்பினர்களாக அமர்ந்து புரந்து வரும் அனைவரையும் போற்றுகின்றோம். கட்டுரைகளை வழங்கித் தமிழ்த் தொண்டாற்றி வரும் அறிஞர் பெருமக்களைப் பாராட்டுகிறோம்.

எவ்வகை மாணியமும், கட்டண விளம்பரமுமின்றிப் பொருளிழப்பைப் பொருட்படுத்தாமல் நமது சங்கம் இவ் இலக்கிய இதழை வெளியிட்டு வருவதை யாவரும் அறிவீர்கள். நமது தமிழ்ப் பொழில் தாய்மொழிப் பற்று இலக்கியச் சிந்தனை தமிழாக்கம், தமிழ்ப்பண்பாடுபேணல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டதாகலின் புறஞ்சுவர் கோலத்தைப் பெரிதாகக் கருதவில்லை. எனினும் அழகுடைய நங்கைக்கு அணிகலன்கள் மேலும் பொலிவுருதலை உலகியலாற் காணுதலின் இதழின் மேல் அட்டையைக் கவினுடைய தாக்க வேண்டுமென்று சங்கத்தார் விரும்பிய வண்ணம் இச்சித்திரைத் திங்கள் முதல் அட்டையை பல வண்ணத்தில் அமைக்கப் பதிப்பாசிரியர் குழு முற்படுகின்றது.

அதனானும் நாளுக்குநாள் ஏறிவரும் தாள் விலை பதிப்புக் கட்டணம் காரணமாகவும் மற்றைய இலக்கிய இதழ்களை ஒட்டி ஐந்தாண்டுகளுக்குப் பின் தனி இதழ் ரூபா ஐந்தாகவும் ஆண்டுக் கட்டணம் அறுபதாகவும் விலையைச்

சிறிது கூட்டவும் இதழ் தொறும் நாற்பது பக்கங்களமைத்து ஆண்டு தொறும் அதிக பக்கங்களையும் அரிய செய்திகளையும் கொண்டதொரு ஆண்டு மலரை கூடுதல் கட்டணமின்றி வெளியிடவும் முடிவு செய்தது.

பொழிலன்பர்கள் இம்மாற்றங்களை மகிழ்ந்தேற்றுச் சங்கத்தின் தமிழ்த் தொண்டிற்கு ஆதரவளிக்க வேண்டுகின்றோம். வணக்கம்.

இங்ஙனம்
பதிப்பாசிரியர் குழு.

புத்தாண்டே ! காத்தருள்வாய்

சாதிமதப் பூசலொடு தாழ்வுயர்வு தீர்ந்துலகில்
நீதி நெறி ஓங்கி நிலை பெறவே – போதரும்சீர்
பூத்த வெகுதான்யப் புத்தாண்டே வாழ்த்துகிறோம்
காத்தருள்வாய் எம்மைக் கனிந்து.

தஞ்சையில் பௌத்தம்

– பா.ஜம்புலிங்கம்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005.

சோழ நாடு

சோழ நாடு அல்லது சோழ மண்டலம் எனப்படும் பரந்த நிலப் பரப்பு திருச்சி, தஞ்சை, நாகை, தென் ஆர்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி, புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகியவற்றை உள்ளடக்கியதே ஆகும். சேர, சோழ, பாண்டிய, பல்லவ நாடுகளில் தலையாயதாகப் பேசப்பெறும் பெருமை உடையது சோழ நாடே. கி.மு.260ஆம் ஆண்டிலேயே சோழ ராஜ்யம் ஏற்பட்டிருக்கவேண்டுமென்பது மௌரிய வம்சத்தைச் சேர்ந்த பௌத்தப் பேரரசர் அசோகரின் பிரகடனங்கள் மூலம் உறுதியாகிறது.

சோழ நாட்டின் நரம்பு மண்டலமாக ஓடி உயிரளிப்பது காவிரியாறு. காவிரி என்றால் இரு புறமும் சோலைகளை விரித்துச் செல்லும் ஆறு என்று பொருள். இலக்கண ஆசிரியர்கள் செந்தமிழ் வழங்கும் நாட்டைத் 'தமிழ் நிலம்' என்றும், தமிழ் திரிந்து வழங்கும் நிலத்தைக் 'கொடுந் தமிழ்நாடு' என்றும் குறிப்பர். செந்தமிழ் நாடு பன்னிரு பகுதிகளாகப் பிரிக்கப்பெறும். அவற்றுள் 'புனல் நாடு' என்பது சோழநாட்டுப் பகுதியாகும். சிலர் புனல் நாடாகிய சோழ நாட்டையே 'செந்தமிழ் நாடு' என்பர். அதாவது சோழ நாட்டில் வழங்குவதே செந்தமிழ் என்பது கருத்தாகும். மூவேந்தர் நாட்டைத் 'தமிழ்நாடு ! தமிழகம்' 'தென் தமிழ் நன்னாடு' எனப் பலவாறு இளங்கோவடிகள் பாடிமகிழ்ந்தார். புத்த ஜாதகக் கதைகளில் 'த்ரமிள ராஜ்யம்' என்று தமிழ்நாடு குறிக்கப் பெறுகின்றது.

தஞ்சை

சோழ வள நாடு நீர் வளம் மிக்கது. நீர் [illegible] பாய்வதால் வயல்கள் எப்பொழுதும் குளிர்ச்சி பொருந்தியனவாக மாறின. அவை தண் + செய் 'தண்செய்' எனப்பட்டது. தண்செய் என்ற பெயரே பின்னாளில் தஞ்சை என மாறியது என்பர். 'தஞ்சபுரி', 'தஞ்சாறை' 'தைஞ்சை',

'குபேரபுரி', 'அளகாபுரி', 'அளகை', 'தென் அளகை', 'சமீவன க்ஷேத்ரம்' போன்ற பல பெயர்கள் தஞ்சைக்கு உண்டு. ஏறக்குறைய முதல் பராந்தகன் (கி.பி.907-955) காலத்தில்தான் 'தஞ்சாவூர்' என்று பெயர் வழங்கத் தொடங்கியது என்பர்.

பல்வேறு இலக்கியங்களில் தஞ்சை, சிறப்பு அடைமொழிகளுடன் கீழ்க்கண்டவாறு குறிக்கப்பெறுகிறது.

'புயல்மேவு பொழில் தஞ்சை'
'ஓதவளர் வண்மை ஒபளநாதன் தஞ்சை' (கல்வெட்டுப்பாடல்கள்)
'ஆரூர்வாழ் புழுகாச்சி அளித்த தஞ்சை' (தஞ்சை நாயகம் மீது பாடல்)
'தரு தஞ்சை' (சர்க்கரைப்புலவர்)
'எழிலார் தஞ்சை' (சரபேந்திரர் குறவஞ்சி)
'தஞ்சை மாநகர்' (சிவ ரகசியம்)
'மலிபுனல்சேர் சோணாடு தஞ்சை' (திருவையாற்றுப்புராணம்)
'தஞ்சைத் தென்னாரும் கொடிவீதி' (மாயூரம் புராணம்)
'மங்களஞ்சேர் தஞ்சை' (சரபேந்திரர் குறவஞ்சி)

பல்லவர், முத்தரையர், சோழர், பாண்டியர், போசளர் போன்றோரைத் தொடர்ந்து விஜயநகர அரசர்கள், தஞ்சை நாயக்கர்கள், மராட்டியர்கள் தஞ்சையை ஆண்டனர்.

தஞ்சையில் பௌத்தம்

'தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம்' எனச் சிறப்பிக்கப்பெறும் தஞ்சை மாவட்டம், வடக்கே கொள்ளிடம் ஆற்றையும், மேற்கே திருச்சி மாவட்டத்தையும், தெற்கே புதுக்கோட்டை மாவட்டத்தையும், கிழக்கே வங்காள விரிகுடாவையும் எல்லையாகக் கொண்டது. இம்மாவட்டத்தின் தலைநகராகத் தஞ்சாவூர் உள்ளது. இவ்வாறு பலவாறாகச் சிறப்பிக்கப் பெறும் தஞ்சை நகரில் புத்தத் திருமேனியும், சிற்பங்களும் காணப்படும் இடங்கள் இக்கட்டுரையின்கண் நோக்கப்படுகின்றன.

தமிழ்ப்பல்கலைக்கழக அருங்காட்சியகம்

தமிழ்ப்பல்கலைக்கழக அரண்மனை வளாகத்தில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் ஒரு புத்தர் சிலை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கருங்கல்லால் ஆன இந்த புத்தர் சிலை தியான நிலையில் 'சம்பர்யங்கா' கோலத்தில் இரு கைகளும் மடிக்கப்பட்டு, மடியின்மீது வைக்கப்பெற்ற நிலையில் உள்ளது. நிமிர்ந்த உருண்டை முகம், நீண்டு வளர்ந்த காதுகள், தியான நிலையில் பாதியாக மூடப்பட்ட கண்கள் இந்த புத்தர் சிலையின் சிறப்பு அம்சங்களாகக் காணப்படுகின்றன.

தஞ்சைப்பெருவுடையார் கோயில்

சமயப்பற்றுடன் கலை ரசனையும் கொண்ட முதலாம் இராஜராஜனால் (கி.பி.985-1014) அமைக்கப்பெற்ற, இந்திய சிற்பக் கட்டிடக் கலையின் மகோன்னத நிலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தஞ்சை இராஜராஜேஸ்வரம் எனப்படும் பெருவுடையார் கோயிலில் பௌத்த சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலில் கருவறையின் தென்புற வாயிலின்கீழ் போதி மரத்தடியில் அமர்ந்துள்ள புத்த பெருமான் உருவச் சிற்பம் காணப்படுகிறது. அருகில் பல சீடர்கள் காணப்படுகின்றனர். ஏறத்தாழ இதே அமைப்பைப் போன்ற – போதி மரத்தடியில் அமர்ந்துள்ள – புத்த பெருமானின் மற்றொரு சிற்பம் கேரளாந்தகன் வாயிலில் காணப்படுகிறது. ஆனால் கருவறையின் தென்புற வாயிலில் உள்ள அளவு சீடர்கள் இங்கு அதிக எண்ணிக்கையில் காணப்பெறவில்லை.

தஞ்சைக் கலைக்கூடம்

தமிழ்ப்பல்கலைக்கழக அருங்காட்சியகம், தஞ்சைப்பெருவுடையார் கோயில் தவிர பௌத்த மதத் தொடர்பான ஆதாரங்கள் இருக்குமிடம் தஞ்சையிலுள்ள கலைக்கூடம் ஆகும். இக்கலைக்கூடத்தில் ஒரு புத்த செப்புத்திருமேனியும், இரு புத்தர் சிலைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நாகப்பட்டினத்தில் முதலாம் இராஜராஜன் காலத்தில் அமைக்கப் பெற்ற புத்த விகாரை இருந்த இடமான தற்போதைய வெளிப்பாளையம் மற்றும்

நாணயக்காரன் தெரு ஆகிய இடங்களிலிருந்து கி.பி.1856 முதல் 1934 வரை அவ்வப்போது 350க்கும் மெற்பட்டபுத்த செப்புத்திருமேனிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் பல சென்னை அருங்காட்சியகத்திலும், பிற மாநில அருங்காட்சியங்களிலும், வெளிநாட்டு அருங்காட்சியங்களிலும் காணப்பெறுகின்றன. அவ்விகாரையைச் சேர்ந்த புத்தத் திருமேனிகளுள் ஒரு செப்புத் திருமேனி இங்கு வைக்கப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். புதூர் ஊராட்சி மன்றத்திலிருந்து பெறப்பட்ட, கி.பி.11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இத்திருமேனியின் வலது கை அபயம் தரும் நிலையிலும், இடது கை வரம் தரும் நிலையிலும் உள்ளன. பத்ம பீடத்தில் 'சமபங்க' கோலத்திலுள்ள அத்திருமேனியை அணைத்த மேலாடை பல மடிப்புகளைக் கொண்டுள்ளது. உள்ளங்கையில் ரேகைக்கோடுகளும், நெற்றியில் திலகம் போன்ற குறியும் காணப்படுகின்றன. காது மடல்கள் நீண்டு உள்ளன. தலையின் உச்சியில் தீச்சுடர் போன்ற 'உஷ்னிஷா' உள்ளது.

மேற்கண்ட செப்புத்திருமேனியைத் தவிர இரு புத்தர் சிலைகள் இங்கு உள்ளன. தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டம் மதசுரம் எண்ணுமிடத்தைச் சார்ந்த கி.பி.11ஆம் நூற்றாண்டுக்குரிய ஒரு சிலை தியான நிலையில் உள்ளது. கால் விரலின் மேல் பகுதி தொடையில் பட, கைகள் மடிமீது வைக்கப்பட்டு தியான நிலையில் 'சம்பர்யங்கா' கோலத்தில் காணப்படுகிறது. வழக்கமாகக் காணப்படும் மேலாடை, இடது மார்பிலிருந்து அகலமான விளிம்புடன் தொடங்கித் தொப்புள் வழியாக நீண்டு இறுக்கமாகச் செல்லும்போது சற்று சிறிதாகிச் செல்கிறது. வலது தோளும், மார்பும் எடுப்பான நிலையில் இருக்கின்றன. பார்ப்பதற்கு அது புரிநூலை ஒத்துள்ளது. உச்சந்தலையில் தலைப்பாகை போல ஏழு வரிசைகளாலான சுருள் முடி, நெற்றித்திலகம், வளர்ந்து நீண்ட காதுகள், உள்ளங்கையில் சக்கரக்குறி போன்றவை இதன் முக்கிய அம்சங்களாகும். முகத்தில் காணப்படும் கட்டுறுதியான தோற்றம், உடல் பகுதி மற்றும் கை கால்கள் தியானத்தில் சிறப்பான நிலையைக் காட்டுகின்றன. காற்றில்லா வெளியில் சலனப்படாத சுடரைப் போல சிறப்பான தவக்கோலம் இச்சிலையில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

கலைக்கூடத்திலுள்ள மற்றொரு புத்தர் சிலை கும்பகோணம் வட்டம் பட்டீஸ்வரத்தைச் சேர்ந்தது. கி.பி.14-15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கருங்கல்லால் ஆன இந்த புத்தர் சிலையும் 'சம்பர்யங்கா' கோலத்தில் இரு கைகளும் மடியின்மீது வைக்கப்பெற்ற நிலையிலுள்ளது. மடித்து சுருக்கப்பெற்ற கால்கள், நெடிது உயர்ந்த உடல் பகுதி, நிமிர்ந்த உருண்டை வடிவ முகம், உச்சந்தலைத் தீச்சுடர் போன்றவை இதன் சிறப்புக்கூறுகளாகும். தலையில் முடி ஆறு வரிசைகளாக உள்ளது. நெற்றியில் காணப்படும் திலகம் போன்ற குறி, அவருடைய நெற்றியில் விழுந்து சுருண்டிருக்கும் சுருட்டை முடியை நினைவூட்டுகிறது. நீண்டு வளர்ந்த காதுகள், தியான நிலையில் பாதியாக மூடுப்பட்ட கண்கள், உறுதியையும் மன அமைதியையும் வெளிப்படுத்தும் உதடுகள், ஆழ்ந்த தியானத்திலும் உடல்ரீதியாக எச்சரிக்கையுணர்வோடு இருப்பதை உணர்த்துகின்ற உயர்ந்தும் முன் நோக்கியும் உள்ள தாடை இச்சிலையின் சிறப்பாகும். அழகாக வடிவமைக்கப்பட்ட சிறிய முலைக்காம்புடன் கூடிய மார்பில் மேலாடை உள்ளது. அகல மடிப்புடைய அந்த ஆடை மடிக்கப்பட்ட முனையுடன் புரிநூல் அணியப்பட்டதைப் போலக் காணப்படுகிறது. உடற்பகுதியில் திகழும் தடித்த மேலாடையின் மடிப்பு பாதம் வரை நீண்டு செல்கிறது. இப்போதும்கூட புத்தபிட்சுகள் இதுபோன்ற ஆடை அணிகிறார்கள். ஞானக்கைகளில் கீழ்நோக்கியுள்ள சக்கரக்குறி காணப்படுகிறது. உள்ளங்கை, நெற்றி, உச்சந்தலையில் காணப்படும் குறிகளும், அடையாளங்களும் நாகை சூடாமணி விகாரையில் கண்டுபிடிக்கப்பட்ட செப்புத்திருமேனிகளில் உள்ளதையே ஒத்துள்ளன.

மேற்கண்டவை மூலம் தஞ்சை நகரில் பௌத்த மதத்திற்கான சான்றுகள் தமிழ்ப்பல்கலைக்கழக அருங்காட்சியகம், தஞ்சைப் பெருவுடையார் கோயில், தஞ்சைக் கலைக்கூடம் போன்ற இடங்களில் இருப்பதை அறிய முடிகிறது.

துணை நின்றவை

இராசு, செ., நெஞ்சை அள்ளும் தஞ்சை, கொங்கு ஆய்வு மையம், தஞ்சாவூர், 1994

கிருஷ்ணசாமி நாயக்கர், தஞ்சை மாநகர தல புராணம், பூர்ண சந்திரோதய அச்சுக்கூடம், தஞ்சாவூர், 1893

குடவாயில் பாலசுப்பிரமணியன், தஞ்சாவூர் (கி.பி.600-1850) திருவாவடுதுறை ஆதீனம், 1995

வேங்கடசாமி, மயிலை.சீனி., பௌத்தமும் தமிழும், தென்னிந்திய சைவ சித்தாந்தநூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, 1957

ஜகதீச ஐயர், பி.வி., ஜில்லா சரித்திரம்–தஞ்சாவூர், குமாரசாமி நாயுடு சன்ஸ், சென்னை, 1925

Gazetteer of Thanjavur District, 1906

Ramachandran, T.N., The Nagapattinam and other Buddhist Bronzes in the Madras Museum, Director of Museums, Madras, 1992

Rathnasabapathy, S., Thanjavur Art Gallery Bronze Sculptures, Art Gallery Administration, Thanjavur, 1982

--------------------------- Divine Bronzes (Miscellaneous), Manuscript, 1983

Venkasami Row, T., Manual of Thanjavur District, Lawrence Press, Madras, 1883

****

உத்தி நோக்கில் அப்பர் போற்றும் கண்ணப்பர்

முனைவர்.தா.ஈசுவரபிள்ளை,
இணைப் பேராசிரியர்,
இலக்கியத்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

இலக்கியப் படைப்பாளர்கள் தாம் படைக்கும் இலக்கிய வகைக்கேற்பவும், பொருண்மைக்கேற்பவும், தாம் கூற எண்ணிய கருத்துக்கள் மக்களைச் சென்று அடையும் வண்ணமும் பல்வேறு வழிமுறைகளைக் கையாள்வர். இவற்றை இலக்கிய உத்திகள் எனலாம். இவ்வகையில் அப்பர்பெருமான் பிற இறையடியார்களின் வரலாறுகளைக் குறிப்பாகவோ விரிவாகவோ சுட்டும் நிலையை அறியமுடிகின்றது. அப்பர்பெருமான் தம் தேவாரத்தில் சிற்சில இடங்களில் கண்ணப்பர் வரலாற்றைச் சுருக்கமாகச் சுட்டுகின்றார். இந்நிலை உத்தியாக எவ்வாறு அமைகின்றது என்பதை இவண் காணலாம்.

கண்ணப்பர் வரலாறும் இறைப்பற்றும்

பொத்தப்பி நாட்டில் உடுப்பூர் என்னும் ஊரில் வேடர் குலத் தலைவராக நாகன் என்பவர் வாழ்ந்து வருகின்றார். இவர் மனைவி பெயர் தத்தை. குழந்தைப் பேறு இன்மையால் இருவரும் குரவையாடியும் ஆடல் பாடல்கள் நிகழ்த்தியும் விழா எடுத்தும் முருகப்பெருமானை வேண்டுகின்றனர். முருகப்பெருமான் அருளால் இவர்களுக்கு ஓர் ஆண்மகவு பிறக்கின்றது. தந்தையாகிய நாகன் ஆவலுடன் குழந்தையைக் கையிலெடுக்கும்போது அக்குழந்தை திண்ணெனக் கனமாகக் காணப்பெற்றமையால் குழந்தைக்கு, "திண்ணன்" எனப் பெயரிடுகின்றனர். இதைச் சேக்கிழார்,

> "அண்ணலைக் கையில் ஏந்தற்(கு) அருமையால், உரிமைப் பேரும்
> திண்ணன் என்றியம்பும் எனத் திண்சிலை வேடர் ஆர்த்தார்"

என்கின்றார்.

குழந்தை வளர்ந்து வில்வித்தை கற்கும் பருவம் அமைந்ததும் நாகன் முதியோரைக் கூட்டி, நன்னாள் குறித்து, உறவினர்களுக்குத் தெரிவிக்கின்றான். இதை,

"வேடர்தம் கோமான் நாகன் வென்றிவேள் அருளால் பெற்ற
சேடரின்மிக்க செய்கைத் திண்ணன் வில் பிடிக்கின்றான்"

என முரசறைந்து தெரிவிக்கவே, வேடர்களெல்லாம் பல்வேறு பொருட்களைச் சுமந்து கொண்டு வருகின்றனர். நாகன் பராய்க்கடன் செய்து வில்விழாவைத் தொடங்குகின்றான். சிலையினைக் காப்புச் செய்தமையைச் சேக்கிழார்,

"பான்மையில் சமைத்துக் கொண்டு படைக்கலம் வினைஞர் ஏந்தத்
தேனலர் கொன்றையார்தம் திருச்சிலைச் செம்பொன்மேடு
வானது கடலின் நஞ்சம் ஆக்கிட அவர்க்கே பின்னும்
கான ஊன் அமுதம் ஆக்கும் சிலையினைக் காப்புச் சேர்த்தார்"

என்கின்றார். ஏழு நாட்கள் விழாக் கொண்டாடுகின்றனர். ஏழாம் நாள் உச்சிப்பொழுதில் வேடர்குல வழக்கப்படி வில் தொழில் வல்லவர்களிடத்தில் திண்ணன் வில் வித்தை கற்கத் தொடங்குகின்றான்.

காலம் செல்லவே நாகன் மூப்பெய்துகின்றான். எனவே தன் குல மக்களிடம்,

". . . . . .மூப்பினாலே முன்போல் வேட்டையினில் முனையகில்லேன்
என் மகனை உங்களுக்கு நாகனாக எல்லீரும் கைக்கொண்மின்"

என்கிறான். அனைவரும் மகிழ்ந்து திண்ணனைத் தலைவராக ஏற்கின்றனர்.

திண்ணன் தந்தையை வணங்கி வேட்டையாடச் செல்கின்றார். வேட்டையின்போது ஏற்பட்ட நீர்வேட்கையைத் தணிக்கச் செங்கண் ஏறுடையார் வைகும் திருமலைச் சாரல் சோலையை அடைகின்றார். உடன் வந்த நாணன்,

". . . . . இந்தச்
சேவையர் திருக்காளத்தி மலைமிசை எழுந்து செவ்வே
கோணமில் குடுமித்தேவர் இருப்பர் கும்பிடலாம்"

என்கின்றான். திண்ணனும் இசைந்து உடன் செல்கின்றார்.

திருமுகலியை அடைந்ததும் வேட்டையாடிய பன்றியை நெருப்பமைத்துப் பக்குவப்படுத்துமாறு கூறிவிட்டு நாகனும் திண்ணனும் மலையை நோக்கிச் செல்கின்றனர். அங்கு,

"மாகமார் திருக்காளத்தி மலை எழு கொழுந்தாயுள்ள
ஏக நாதரைக் கண்டார்".
அன்பும் மகிழ்ச்சியும் மேலோங்க ஓடிச் சென்று இறைவனைத் தழுவி,
"உம்முடன் துணையாய் உள்ளார் ஒருவரும் இன்றிக் கெட்டேன்
இம்மலைத் தனியே நீர் இங்கிருப்பதே என்றுறைத்தார்.

இறைவனுக்குப் பூசை செய்திருப்பதைக் கண்டு இதைச் செய்தவர் யார் என வினவ, நாணன்,

" . . . . குளிர்ந்த நீர் இவரை ஆட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டி ஊட்டி முன் பறைந்தோர் பார்ப்பான்
அன்றிது செய்தான் ; இன்றும் அவன் செய்ததாகும்" என்கிறான்.

இறைவன் இக்கொடிய காட்டில் தனியே உள்ளார். இறைவனுக்கு அமுது படைக்க ஊன் கொண்டுவரவேண்டும். என் செய்வது எனப் போவோர் வருவாராகிக் கன்றினை அகலாத, ஈன்றணிமை மாறாத பசுவைப் போன்ற மனநிலையில் காணப்படுகிறார். இறுதியில் ஊன் கொண்டுவரச் செல்கிறார்.

காடன் கொடுத்த ஊனைத் தேக்கிலையில் செய்த கல்லையில் வைத்துக் கொள்கிறார். நீராட்ட வாயில் நீரை அடக்கிக் கொள்கிறார். பள்ளித் தாமத்தைத் தலையில் வைத்துக் கொள்கிறார். "இனிய எம்பிரானார் சாலப்பசிப்பார்" என எண்ணி ஏங்கி மலையை அடைகின்றார். இறைவன் முடிமீதுள்ள மலரைச் செருப்பால் அகற்றுகின்றார். வாயிலுள்ள நீரால் மஞ்சள மாட்டுகிறார். தலையில் வைத்துள்ள பள்ளித்தாமத்தைச் சூட்டுகின்றார். கல்லிலையில் வைத்துள்ள ஊனைப் பற்களால் அடுக்கி, "நயனீரே அமுது செய்தருளும்" என வேண்டுகின்றார். மாலைப் பொழுதானதும் மலையில் கொடிய விலங்குகள் உண்டுமே என அஞ்சி, இறைவனை விட்டகலாது, கையில் வில்லுடன் காவல் புரிகின்றார். பொழுது விடிந்ததும் இறைவனுக்கு அமுது கொனன்டுவரச் செல்கின்றார்.

சிவகோசரியார் வழக்கப்படி இறைவனுக்குப் பூசைபுரிய நீரும் மலரும் கொண்டுவருகின்றார். இறைவன் முன்னர் இறைச்சித் துண்டுகளும்

எலும்புகளும் உள்ளமையைக் கண்டு மனம் பதைக்கின்றார். அவற்றை அலகிட்டு மாற்றிவிட்டு நீர் கொண்டுவரச் செல்கின்றார். அப்போது திண்ணன் தம் வழக்கப்படி இறைவனுக்கு பூசை செய்கின்றார். நாள்தோறும் இவ்வாறு நிகழ்வதைக் கண்டு சிவகோசரியார் மனம் வருந்துகின்றார். இறைவன் அவர் கனவில் தோன்றி,

"வன்திறல் வேடுவன் என்று அவனை நீ நினையேல்
நன்று அவன்தன் செயல்தன்னை நாம் உரைப்பக் கேள்"

என்றும்,

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன் பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறறி நீ"

என்றும் அருளிச் செய்தார். அவன் செருப்பால் மலர்களை நீக்கும்போது பெறும் செருப்படி இளம்பருவச் சேயிற் சிறப்புடையதும், அவன் வாய் உமிழும் கங்கை நீரைவிடப் புனிதமானதும், அவன் இடும் மலர்கள் அயன், மால் முதலியோரிடும் மலர்களைவிட மேலானதும், அவன் படைக்கும் ஊன் அமுதம் மறையோர் தரும் அவியை விடச் சிறப்பானதும், அவன் முகம் மலர, அகம் நெகிழ என்னை அல்லால் அறிவுறாமொழிகள் அந்தணர்கள் உரைக்கும் தோத்திரங்கள், மந்திரங்களை விட நல்லனவும் ஆகும். எனவே,

"உனக்கவன்றன் செயல்காட்ட நாளை நீ ஒளிந்திருந்தால்
எனக்கவன்தன் பரிவிருக்கும் பரிசெலாம் காண்கின்றாய்
மனக்கவலை ஒழி"

என்று இறைவன் அருளிச் செல்கின்றார்.

அடுத்தநாள் காலையில் அந்தணர் இறைவனுக்குரிய வழிபாடுகளை முடித்துவிட்டு மறைந்து நிற்கின்றார். ஆறாம் நாள் திண்ணன் தம் வழிபாட்டிற்குரிய பொருள்களுடன் வருகின்றார். அப்போது

"அண்ணலார் திருக்காளத்தி அடிகளார் முனிவனார்க்குத்
திண்ணனார் பரிவு காட்டத் திருநயனத்தில் ஒன்று
துண்ணென உதிரம் பாய இருந்தனர் . . . ."

இதைக்கணட திண்ணன் விரைந்து ஓடி வந்து குருதியைக் கண்டு மயங்கி வீழ்கின்றார். உடனே மஞ்சன நீர் சிந்தியது. ஊன் சிதறியது. பள்ளித் தாமம் வீழ்ந்தது. மீண்டும் எழுந்து திண்ணன் இறைவன் கண்ணில் வடியும் குருதியைத் துடைக்கின்றார். அது நிற்காமயைக் கண்டு மீண்டும் மயங்கி விழுகின்றார். இத்துன்பம் விளைவித்தது யார் எனத் தேடுகின்றார். கதறுகின்றார். குருதி வடிவதை நிறுத்துதற்குரிய மருந்தைத் தேடி அலைகின்றார். பச்சிலைகளைப் பறித்துக்கொண்டு பூதநாயகன்பால் வைத்த மனத்தினும் விரைந்து வருகின்றார். பச்சிலைகளைப் பிழிந்து கண்ணில் ஊற்றிய பின்பும் குருதி நிற்கவில்லை. உடனே "உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன்" என்ற உரையை உணர்கின்றார். அம்பால் தம் வலக்கண்ணைப் பிடுங்கி நிலத்தினின்றும் ஏறப்பாய்கின்றார். தோள்களைக் கொட்டிக் கூத்தாடுகின்றார். "நன்று நான் செய்த இந்த மதி" என உன் மத்தர் போல் மகிழ்கின்றார்.

வலத்திருக்கண்ணில் தம் கண் அப்பிய வள்ளலார் தம் நலத்தினைப் பின்னும் காட்ட இறைவனின் மற்றோரு கண்ணிலும் குருதி வடிகின்றது. திண்ணன் இறைவனின் இடக் கண்ணில் இடக்காலில் ஊன்றி மகிழ்வுடன் அம்பால் தம் இடக்கண்ணைப் பிடுங்க முயல்கிறார். இதைக் கண்ட இறைவன், "கண்ணப்ப நிற்க" எனத்தம் திருக்கையால் தடுக்கின்றார். கண்ணப்பரின் அன்பின் உறைப்பைக் கண்ட இறைவன், " என் வலத்தில் மாறிலாய் நிற்க" என அருள்கின்றார்.

அப்பர் போற்றும் கண்ணப்பர்

கண்ணப்பரின் இத்தகு இறையன்பை அப்பர் பெருமான் தம் தேவாரத்தில்,

"கண்ணப்பன், கண்ணப்பக் கண்டு தந்தார்
கழிப்பாலை மேயக் கபாலப்பனார்"

"குலப்பெருந்த டக்கை வேடன் கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்

துவர் பெரும் செருப்பால் நீக்கித் தூயவாய்க்கலசம் ஆட்ட
உவப்பெரும் குருதி சோர ஒரு கணை இடந்து அங்கு அப்பர்
தவப்பெரும் தேவு செய்தார் சாய்க்காடு மேவினாரே"
"கடிமலிந்த மலர்க் கொன்றைச் சடையான் கண்டாய்
கண்ணப்ப விண்ணப்புக் கொடுத்தான் கண்டாய்"
"கண்ணப்பர்க்கு அருள் செய்த காளை கண்டாய்"
"காப்பதோர் வில்லும் அம்பும் கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெருங்கண்கள் செய்யக் குருதிநீர் ஒழுகத் தங்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கை வீரட்டானரே"

எனக் காட்டுகின்றார்.

உத்தி நிலை

அப்பர் வாழ்ந்த காலச் சமுதாயத்தில் சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்குடன் திகழ்ந்தன. இச்சமயங்களுக்கெதிராகச் சைவ, வைணவ சமயங்களை வளர்க்கப் பக்தி இயக்கம் உருவானது. பக்தி இயக்க அருளாளர்களில் அப்பர் பெருமான் குறிப்பிடத்தக்கவர் ஆவார். பக்தி இயக்கத்திற்கு மக்கள் ஆதரவைப் பெற அருளாளர்கள் முயன்றனர். இறைவனின் தண்ணருளைப் பெற ஆழமான, உண்மையான அன்பு செலுத்தவேண்டும். உண்மை அன்புடைய இறை அன்பர்கள் செலுத்தும் எப்பொருளையும், மேற்கொள்ளும் எச்செயலையும் இறைவன் இன்முகத்துடன் ஏற்றுக் கொள்வான் என அறிவுறுத்தினர். கற்றவர்கள் இச்சிந்தனைகளை எளிதில் புரிந்து கொள்வர். ஆனால், பாமரர்களும் இவற்றை எளிதில் உணரும் வண்ணம் முன் நிகழ்வுகள் சிலவற்றைக் கூற வேண்டிய நிலை அப்பர் பெருமானுக்கு ஏற்பட்டது. எனவே, சமுதாய மக்கள் முன்னரே நன்கு அறிந்திருந்த கண்ணப்பர் வரலாற்றைச் சுட்டுவதை உத்தியாகக் கையாண்டுள்ளார் எனலாம்.

இறை அன்பர்களிடையே காழ்ப்புணர்வு சிறிதும் கிடையாது என்பதைக் காட்டும் நோக்கமுடனும் அப்பர் பெருமான் கண்ணப்பர் வரலாற்றைச் சுட்டுகின்றார் எனக் கொள்ளலாம்.

இறைவன் பெருமைகள், இறைவனின் அருளும் ஆற்றல்கள், உண்மை அடியார்களின் பண்புகள், இறைப்பற்று முதலியவற்றை மக்களுக்கு எடுத்துக் காட்டவும் அப்பர் பெருமான் கண்ணப்பர் வரலாற்றைப் பயன்படுத்துகின்றார் எனலாம்.

"நீராகி நீறுமிழும் நெருப்புமாகி நினைவாகி
நினைவினிய மலையான் மங்கை
கூறாகிக் கூற்றாகிக் கோளுமாகிக் குணமாகிக்
குறையாத உவகைக் கண்ணீர்
ஆறாத ஆனந்தத்து அடியார் செய்த அனாசாரம்
பொறுத்தருளி அவர் மேல் என்றும்
சீறாத பெருமானைத் திருமாற் பேற்றுஎம் செம்
பவளக்குன்றினைச் சென்றடைந்தேன் நானே"

என்ற பாடலும் இறைவன் இயல்பை மொழிகின்றது.

இவற்றால், இறைவன் பெருமைகளைக் கூறல், அடியார்களின் அன்பின் உறைப்பைப் புலப்படுத்துதல் ஆகியன மூலம் மக்களிடையே இறைப்பற்றை ஊட்ட, மக்களைப் பக்தி நெறியில் செலுத்த அப்பர் பெருமான் கையாண்டுள்ள உத்திகளில் ஒன்றாகக் கண்ணப்பர் வரலாறு கூறுதலும் அமைகின்றது எனலாம்.

"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை

என் நோற்றான் கொல் எனும் சொல்" என்னும் வள்ளுவர் வாய் மொழியில் தந்தையன் நோன்பு என உலகம் போற்றத்தனயன் செய் உதவியாவை எனின் இவை என உணலுமுகத்தான் அறப்பளீசுரசதக ஆசிரியர் கூறுவன

"தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரும்
தருமங்கள் செய்துவரலும்
தன்மமிகு தானங்கள் செய்தலும் கனயோக
சாதகம் எனப்படுதலும்
மங்குதலிலாததன் தந்தைதாய் குலுமொழி
மறுது வழிபாடு செயலும்
வழிவழி வருந்தமது தேவதா பத்திபுரி
மார்க்கமும் தீர்க்காயுளும்
இங்குகித குணங்களும் வித்தையும் புத்தியும்
ஈகையும் சன்மார்க்கமும்
இவையெலாம் உடையவன் புதல்வனும் அவனையே
ஈன்றவன் புண்யவானாம்
அங்கச விரோதியே சோதியே ஆதிசேர்
அரசனெம தருனம் மதவேள்
அனுதினமும் மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே" என்பனவாம்.

சென்ற இதழ் தொடர்ச்சி :-

மங்கல மடந்தை மாதவி
(வரலாறு)

பாவலர். ச.பாலசுந்தரம்

பின்னர் நூலோர் வகுத்த எண்வகை வரிக்கூத்தினும், ஒப்பனை செய்து கொள்ளுதலினும் மெய்ப்பாடு காட்டி நடிப்பதிலும் அவள் கொண்டிருந்தத் திறமைகளைக் கோவலன் கூற்றில் வைத்து விளக்குகின்றார்.

திலகமும் அளகமும் சிறுகருஞ்சிலையும்
குவளையும் குமிழும் கொள்கையும் கொண்ட
மாதர் வாண்முகத்து மதைஇய நோக்கமொடு
காதலின் தோன்றிய கண்கூடுவரியும்
புயல் சுமந்து வருந்திப் பொழிகதிர் மதியத்துக்
கயல் உலாய்த்திரிதரும் காமர் செவ்வியிற்
பாகுபொதி பவளம் திறந்து நிலா உதவிய
நாகிள முத்தின் நகை நலங்காட்டி
வருகென வந்து போகெனப் போகிய
கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமும்
அந்தி மாலை வந்ததற் கிரங்கிச்
சிந்தை நோய் கூருமென் சிறுமை நோக்கிக்
கிளிபுரை கிளவியும் மடவன நடையும்
களிமயிற் சாயலும் கரந்தன ளாகிச்
செருவேல் நெடுங்கண் சிலதியர் கோலத்து
ஒருதனிவந்த உள்வரி யாடலும்
சிலம்பு வாய் புலம்பலும் மேகலை ஆர்ப்பவும்
கலம்பெரு துசுப்பினள் காதல் நோக்கமொடு
திறந்து வேறாய என் சிறுமை நோக்கியும்
புறந்துநின் றாடிய புன்புற வரியும்
கோதையும் குழலும் தாதுசேர் அளகமும்
ஒருகாழ் முத்தமும் திருமுலைத் தடமும்
மின்னிடை வருத்த நன்னுதல் தோன்றிச்
சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி உய்ப்பப்
புணர்ச்சியுட் பொதிந்த கலாந்தரு கிளவியின்

இருபுற மொழிப் பொருள் கேட்டன ளாகித்
தளர்ந்த சாயல் தகைமென் கூந்தல்
கிளர்ந்து வேறாகிய இளர்வரிக் கோலமும்
பிரிந்துறை காலத்துப் பரிந்தன ளாகி
என்னுறு கிளைகட்குத் தன்னூறு துயரம்
தேர்ந்து தேர்ந்துரைத்த தேர்ச்சி வரியன்றியும்
வண்டலர் கோதை மாலையுள் மயங்கிக்
கண்டவர்க் குரைத்த காட்சி வரியும்
அடுத்தடுத்தவர்முன் மயங்கிய மயக்கம்
எடுத்தவர் தீர்த்த எடுத்துக்கோள் வரியும்
ஆடல் மகளே யாதலின் ஆயிழை
பாடுபெற்றன வப்பைந்தொடி தனக்கு" என வசந்த மாலையிடத்துக் கூறுதலான் அறியலாம்.

இவ்வரிக் கூத்துக்களை விளக்குமுகத்தான் கோவலன் மாதவியின் பால் கொண்டிருந்த வேட்கையால் அவளிடத்து மிக எளியனாய்க் கிடந்தமையும் பல்வேறு ஒப்பனைகளாலும் காமுறு மொழிகளாலும் அவள் தன்னை மயக்கி இன்புறுத்திய நிலைகளையும் அவளைத் தணந்த நிலையில் அவள்தன் சுற்றத்தாரிடம் தனது துயரத்தைக் கூறி அவர்கள் தேற்றுமாறு செய்து கொண்ட பாவனைகளையும் புலப்படுத்தியுள்ளதைக் காணலாம்.

மாதவியின் பிற கலை ஞானங்களைக் கூறும் காட்சிகள் சிலப்பதிகாரத்துள் அமையவில்லை எனினும் இதனொடு தொடர்புடைய காப்பியமாகிய மணிமேகலையுள் வசந்த மாலையின் கூற்றில் வைத்து ஆசிரியர் சாத்தனார் புலப்படுத்துகின்றார். அவை வருமாறு :-

வயந்தமாலையும் மாதவி துறவிக்கு
அயர்ந்து மெய் வாடிய அழிவினளாதலின்
மணிமேகலையொடு மாதவி யிருந்த
அணிமலர் மண்டலத் தகவயிற் செலீஇ
ஆடிய சாயல் ஆயிழை மடந்தை
வாடிய மேனி கண்டுளம் வருந்தி
பொன்னே அனையாய் ! புகுந்தது கேளாய்
உன்னோ டிவ்வூர் உற்றதொன்றுண்டுகொல்

வேத்தியல் பொதுவியல் என்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டும் தூக்குந் துணிவும்
பண்ணியாழ்க் கரணமும் பாடைப் பாடலும்
தண்ணுமைக் கருவியும் தாழ்தீங்குழலும்
கந்துகக் கருத்தும் மடைநூற்செய்தியும்
சுந்தரச் சுண்ணமும் தூநீராடலும்
பாயற் பள்ளியும் பருவத் தொழுக்கமும்
காயக் கரணமும் கண்ணியது உணர்தலும்
கட்டுரை வகையும் கரந்துறை கணக்கும்
வட்டிகைச் செய்தியும் மலராய்ந்து தொடுத்தலும்
கோலங் கோடலும் கோவையின் கோப்பும்
காலக் கணிதமும் கலைகளின் துணிவும்
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்
கற்றுத் துறையோகிய பொற்றொடி நங்கை – என்பதாகும்.

இப்பாடற் பகுதியால் மாதவி, வேந்தியல் பொதுவியல் என்னும் இருவகை நாடகக் கலைகளிலும், யாழ்மீட்டுதல், இசைத்தல் கலையிலும் அகநாடகம் புறநாடகங்களுக்குரிய பாடற் கலையிலும் தண்ணுமை (முடிவு) இசைத்தற்கலையிலும், குழலிசை வழங்கும் கலையிலும் பந்து அம்மானை கழங்கு முதலியவற்றை ஆடும் கலையிலும் அறுசுவை உண்டியும் பண்டங்களும் சமைக்கும் கலையிலும் நறுமணப்பொடி (சுண்ணம்) கூட்டும் கலையிலும் நீர்விளையாட்டுக் கலையிலும் பள்ளியில் புரியும் பல்வேறு லீலைக்கலையிலும் பருவ காலங்களுக்கு ஏற்ப ஒப்பனை செய்து கொண்டு ஒழுகும் கலையிலும் உடம்பினாற் புரியும் கலவிக் கலையிலும் பிறர் உடகருந்தைப் புரிந்து கொள்ளும் கலையிலும் சொல்வகை தேர்ந்து உரையாடும் கலையிலும் எழுதுகோல் கொண்டு எழுதும் கலையிலும் ஓவியக் கலையிலும், மாலை தொடுக்கும் கலையிலும் – நவமணிகளைக் கோத்துப்புரியும் கலையிலும் சோதிடக் கலையிலும் இவை போன்ற பிற கவின் கலைகளிலும் நுண் கலைகளிலும் ஒப்பற்ற தேர்ச்சி பெற்றவள் என்பதை அறியலாம்.

இளங்கோவடிகள், "எண்ணான்கின்கிரட்டி இருங்கலைபயின்ற பண்ணியல் மடந்தையர் பயங்கெழுவீதி" எனக் கணிகையரைக் குறிப்பிடுவார்.

மாதவி உயர்குல மகளிரை ஒப்பக் கோவலனோடு மனையறம் புரிந்து மணிமேகலையை மகளாகப்பெற்று வாழ்ந்தமையையும் அவள் பண்பாட்டினையும் மாடலமறையோன் கூற்றில் வைத்துப் பின் வருமாறு ஆசிரியர் கூறுகின்றார்.

வேந்தறு சிறப்பின் விழுச் சீரெய்திய
மாந்தளிர் மேனி மாதவி மடந்தை
பால்வாய்க் குழவி பயந்தனள் எடுத்து
வாலாமைநாள் நீங்கிய பின்னர்
மாமுது கணிகையர் மாதவி மகட்கு
நாமநல் லுரை நாட்டுது மென்று
தாமின் புறூஉந் தகைமொழி கேட்டு ஆங்கு
- -.
எங்குலத் தெய்வப் பெயரீங்கிடுகென (கோவலன்கூற)
அணிமேகலையார் ஆயிரங் கணிகையர்
'மணிமேகலை' என வாழ்த்திய ஞான்று
மங்கல மடந்தை மாதவி தன்னொடு
(கோவலன்) செம்பொன் மாரி செங்கையிற் பொழிந்தனன்

(அடைக்கலக்காதை 20 – 41)

என்னும் இதன்கண் மாடலமறையோன் மாதவியை மங்கல மடந்தை எனச் சிறப்பிப்பதைக் காணலாம்.

கோவலன் மறைந்தமை கேட்டுப் பெருந்துயறுற்ற மாதவி தான் உயிர்விடாமல் கைம்மை நோன்பு பூண்டு அறவண அடிகளைச் சார்ந்து துறவியாக வாழ்ந்தாள். காரணம் தான் மடியின் தன் மகளாகிய கோவலன் மகள் மணிமேகலையைத் தன் தாயும் சுற்றமும் கணிகையர்க்குரிய தொழிலில் ஈடுபடுத்திவிடுவர் என்னும் அச்சமேயாகும். அதனால் மணிமேகலை பருவம் எய்திய ஞான்றே அவள் முடியைக்களைந்து துறவுக்கோலம் பூணச்செய்தாள். மணிமேகலை தெய்வத் தன்மை பெற்ற பின்னரே மாதவி மறைகிறாள். கணிகையர் குலத்தில் தோன்றிய மாசிலாமணியாக கற்பின் செல்வியாக இளங்கோவடிகள் மாதவிப் பாத்திரத்தைப் படைத்து ஒரு புரட்சியை செய்துள்ளார்.

❄❄❄❄❄❄❄❄

சங்க காலத்தில் கைம்மை

வ.கிருஷ்ணன்,
அ.அ.அரசுக்கல்லூரி
ஆத்தூர்.

முன்னுரை

'சதி' என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம் பெண்டிங் பிரபு காலத்தில் (1829) ஒழிக்கச் சட்டமியற்றப்பட்டது. இராஜஸ்தான் மாநிலத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு "ரூப் கன்வர்" என்ற பெண், தன் கணவன் இறப்புக்குப் பின் உடன்கட்டை ஏற்றப்பட்டு இறந்தாள். அம் மாநிலத்தில் இவ் வழக்கமானது கடுமையான அரசியல் சட்டத்திற்கு அப்பாலும் செயல்பட்டு வருவதைத்தான் இச்செயல் காட்டுகின்றது. பெண்களில் சிலரைச் 'சதி' கலர்ந்திருப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. கணவன் இறந்த பிறகு பெண்கள் வாழும் நெறிமுறைகள் கடுமையான விதிகளுக்கு உட்படுத்தப்பட்டன. காலப்போக்கில் இது பெரும்பாலான மாற்றத்தினைக் கொண்டதாயினும் முற்றிலுமாக மாறி விடவில்லை. சங்க காலத்தில் 'கைம்மை' எத்தகு நிலையில் இருந்தது என்பதை இக்கட்டுரை விவரிக்கின்றது.

சங்க கால மகளிர்

சங்க காலம் 'தமிழர்களின் பொற்காலம்' எனக் கருதப்படுகின்றது. அப் பொற்காலத்தில் பெண்கள் ஆடவருக்கு நிகரானவர்களாக மதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆண்களுக்குச் சமமான உரிமையினையும் பெற்றிருக்கிறார்கள். ஆடவரைப் போல அவர்கள் கள்ளும் அருந்தினர் [1]; அரசியல் காரணமாய்த் தூது சென்றனர் [2]; சிறந்த கவிஞர்களாக இருந்தனர். ஆயினும் அவர்தம் நிலை மிக உன்னதமாய் இருந்திருக்கின்றதா என்பது வினாவுக்குரியதே. கணவனை இழந்த சங்க காலப்பெண்டிர் நிலை சிறப்புடையதாக இல்லை. இந்திய மரபு வழிப்பட்ட (?) பெண்களாகவே இருந்தனர். பிற்காலத்தில் 'வீடுபேறு' பற்றிய சமய நம்பிக்கையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மிகக் கொடிய பழக்கமே உடன்கட்டை

ஏறுதல். இவ் வழக்கத்தினைச் சங்க கால மகளிரும் ஏற்றனர். ஆண்களுக்கு நிகராக சம உரிமை படைத்தவர்களாக விளங்கிய மகளிர் உடன்கட்டையேறி இன்னுயிர் நீத்தமை வியப்பிற்குரியதாகக் கருதப்படுகிறது.

கைம்மை நோன்பு

திருமணத்திற்கு முன்பிருந்தே பொட்டிட்டுப் பூச்சூடி, வளையலணிந்து, நல்லுணவு உண்ட பெண்டிர்தம் கணவர் இறந்த பின் மங்கலம் அனைத்தையும் துறந்தவராகின்றனர். பஞ்சணையிலோ, நல்ல படுக்கையிலோ படுத்துறங்கிய மகளிர், பாயும் இல்லாத சிறிய கற்கள் நிறைந்த வெறுந்தரையில் படுத்து உறங்கினர். தாளிப்புடன் கூடிய அறுசுவை அடிசிலைத் தவிர்த்து, நீர்ச்சோற்றையும், புளி கூட்டப்பட்ட வேளைக் கீரையினையும் உயிர் வாழ்வதற்குரிய உணவாகக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் அல்லியிடத்து உண்டான புல்லரிசியினையே தம் உணவாக உட்கொண்டனர். இதனை,

காழ்போல் நல்விளர் நறுசெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சியாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்"

என்ற பாடல் அடிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. [3]

நீர்ச்சோறோ, புல்லரிசிச் சோறோ யாதாயினும் அதனைக் கணவனை இழந்த மகளிர் காலந்தவறாமல் முறையான நேரத்தில் உண்டார்களா எனின் இல்லை எனலாம். நேரந்தவறி உண்ணும் நிலை கணவனை இழந்த பிறகே உருவாயிற்று.

பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்து
இன்னா வைக லுண்ணும்

அல்லிப் படூஉம் புல்லா யினவே.

என்று ஒக்கூர் மாசாத்தியார் கணவனை இழந்த பெண்ணொருத்தியின் நிலையினை எடுத்துக் காட்டியுள்ளார். [4]

இறந்தவனுக்கு உணவிடுதல்

கணவன் இறந்த பிறகு அவன் உயிர் நீத்த இடத்தினை, அவனுடைய மனைவி சாணத்தால் மெழுகி, புல்லின்மேல் உணவு இட்டு அவனுக்குப் படைப்பாள். வேள் எவ்வி என்ற அரசன் இறந்த பின் அவனுடைய மனையில், அவன் மனைவியின் செயலினை வெள்ளெருக்கிலையார்,

“பிடியடி யன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்”

என்று காட்டுகின்றார். [5] இதே போன்று இன்னுமொரு காட்சி, மீனிறைச்சியினைப் பலருடன் சேர்ந்து விருந்துண்ணும் இடமானது, கணவன் இறந்து பட்டதும் மாறிவிடுகின்றது. இறந்த கணவனுக்கு உணவு படைக்க வேண்டி, புழுதி படிந்த சிறிய இடத்தினை அழுத கண்களோடு ஆவின் சாணத்தால் மெழுகினாள்.

“அடங்கிய கற்பின் ஆய்நுதன் மடந்தை
உயர்நிலை யுலக மவன்புக வார
நீறாடு சுளகிற் சீறிடம் நீக்கி
அழுத லானாக் கண்ணள்
மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே ”[6]

கண்ணீரையும் சாணத்தோடு சேர்த்து மெழுகுகின்ற இந் நிலையை தும்பிசேர் கீரனார் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

கூந்தல் களைதல்

பெண்ணுக்கு அழகினைத் தருவது கார்வளர் கூந்தர். மயிலின் தோகைக்கும், கார்மேகத்திற்கும் ஒப்பிட்டுக் கூறக்கூடிய கூந்தலுக்குப் பெண்கள் அகிற்புகையூட்டியும், வாசனைத் திரவியங்களைப் பூசியும்

அழகுபடுத்துவர். இக் கூந்தல் ஒப்பனைச் செயல் கணவர் உயிருடன் இருக்கின்ற காலம் வரையிலுமே, கணவர் இறந்த பின்னர் வாசனைத் திரவியங்களால் பெண்கள் தம் கூந்தலை அழகுபடுத்துவதில்லை. மாறாக கூந்தலைக் குறைத்துக் கொண்டனர். "பெண்ணை மனைவியாகப் பெற்றவனுடைய சிறப்புமிகு ஆற்றல் அனைத்தும், அவளுடைய தலையின் முடியில் குவிந்து கிடக்குமாம். கணவனுடைய மறைவால், அவள் அந்த ஆற்றல்கள் அனைத்தையும் இழந்து விட்டாள் என்பதைப் புலப்படுத்தும் அறிகுறியே கைம்பெண்களுக்கு மொட்டை அடித்தலாகும்" என்ற விளக்கம் கூந்தல் களைவதற்காகப் பின்னாளில் மானிடவியலாளரால் கூறப்படுகிறது. [7] கணவர் அணிவித்த தாலி இன்மையின் வளையல் முதலிய அணிகலன்களை அணிவதையும் பெண்கள் இழந்தனர். இத்தன்மையினை,

"கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி"

என்று தாயங்கண்ணியார் குறிப்பிடுகின்றார். [8] கணவர் இறந்த பின்னர் பெண்கள் வளையல் அணியாதிருந்ததை,

"வளையில் வறுங்கை யோச்சி . . . ."

என்று குளம்பந்தாயனாரும், கயமனாரும் தம் பாடல்களில் பகர்ந்துள்ளனர். [9]

கைம்பெண்கள் கூந்தலைக் குறைத்துக் கொள்வதேயன்றி முழுவதுமாகக் களைந்து விடுகின்ற வழக்கமும் இருந்தது. காரியாதி என்ற சிற்றரசன் இறந்த பின்பு, பொலிவிழந்த அவனுடைய மனைவியின் அழகை ஆலூர் மூலங்கிழார் உரைக்கையில், கணவனை இழந்த பெண்ணின் நிலையுடன் ஒப்பிட்டு உரைக்கின்றார்.

"கொய்ம்மழித் தலையோடு கைம்மையுறக் கலங்கிய
கழிகல மகடூஉப் போலப்
புல்லென் றணையாற் பல்லணி யிழந்தே"

என்ற இப்பாடலடிகள் கணவனை இழந்த பெண் தன் சிகையினை மழித்தலோடு அணிகலன்களையும் துறந்த நிலையினை அறிவிக்கின்றன. [10]

இதனை மாறோக்கத்து நப்பசலையார் பாடலும் உறுதிப்படுத்தியுள்ளது. பூக்களையும் தழையினையும் சூடிக் கொண்டதுங்கூட கணவன் உயிருடனிருக்குங் காலத்து மட்டுமே. கணவன் இறப்பிற்குப் பின்னர் பெண்கள் இவற்றை அணியாது இருந்தனர்.

"மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்
தொன்றுதாம் உடுத்த அம்பகைத் தெரியற்
சிறுவெள் ளாம்பல் அல்லி யுண்ணும்
கழிகல மகளிர் போல"

என்பன அப்பாடல் அடிகளாகும்.[11] இத்தகைய நிலையே 'கைம்மை நோன்பு' எனக் கருதப்பட்டது. இதனைக் 'கைம்மைக் கொடுமை' என்றே உரைக்கலாம். சிலப்பதிகார காலத்தில் இக் 'கைம்மை நோன்பு' புண்ணியத் துறைகளில் நீராடுவதோடு தொடர்கின்றமையைக் காணலாம்.[12]

கைம்மைத் துயருக்கு மாற்று

கணவனை இழந்த காரிகையர்தம் கூந்தலை மழித்து, பூ, தழையாடை முதலியவற்றைத் துறந்து, அணிகலன்களை இழந்து, தூய நல்லடிசிலை விலக்கி, நீர்ச்சோற்றையும், புல்லரிசிச் சோற்றையும் உண்டு, பஞ்சணையினையும் பாயினையும் நீக்கி, பருக்கைக் கற்கள் நிறைந்த தரையில் படுத்துறங்கி வாழ்ந்த வாழ்க்கை முறைமை 'கைம்மை நோன்பு' ஆகும். இந் நோன்பிற்கு, சங்க கால மகளிர் மாற்றுத் தேடினர். அஃது இக்கைம்மை நோன்பினை ஏற்க மறுப்பதா, எதிர்த்து போராடுவதா என்ற கருத்தாக்கத்தில் அமையவில்லை. தம் இன்னுயிரைத் துறப்பதன் மூலமே தீர்வு கண்டனர். கணவன் இறந்த பின்னர் உடன்கட்டை ஏறுதல் அல்லது காடுகிழாள் (கொற்றவை) கோயில் முன்பு தீ மூட்டப்பட்டு அதனுள் இறங்குதலைத் தெரிவு செய்தனர். புறங்காட்டில் காடுகிழாள் கோயில் முன்பு தீயினுள் இறங்கி பூதபாண்டியனின் தேவி பெருங்கோப்பெண்டு உயிர் துறந்தமையை மதுரைப் பேராலவாயர் பாடினார்.[13]

'கைம்மை நோன்பின்' கொடுமையினை நன்கறிந்த பெருங்கோப்பெண்டு, தன் கணவன் பூதப்பாண்டியன் இறந்ததும், 'உடன்கட்டை ஏறத் துணிகிறாள். நாட்டின் நிலை குறித்து அரசியல் சுற்றத்துச் சான்றோர் தடுத்தனர். பெருங்கோப்பெண்டு இதனைப் 'பொல்லாச் சூழ்ச்சி' என்று கூறி உயிர்துறக்க முயன்றாள்.

"பல்சான் றீர பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே"

என்பது அவ் அரசியார் கூற்று. [14] கைம்மை நோன்பின் கொடுமையினைப் பொறுத்துக் கொள்ள முடியாமையினாலேயே இக் கூற்று வெளிப்பட்டது.

ஒருவர் இறந்த பின் அவருடலை எரிக்கவோ, புதைக்கவோ செய்தனர். எரிக்கின்ற பழக்கம் உடையோரிடம் கணவனை இழந்த பெண் தீ வளர்த்து, அத்தீயினுள் இறங்கினாள். புதைக்கின்ற பழக்கம் உடையோர், இறந்தவரைப் பெரிய தாழியுள் இட்டுப் புதைப்பர். அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பெற்ற 'முதுமக்கட்டாழிகள்' இதனை நமக்கு அறிவிக்கின்றன. இது குறித்துப் புறநானூற்றிலும் அகச் சான்று உள்ளது. கணவனை இழந்த பெண்ணொருத்தி, கலஞ்செய்து கொடுக்கும் குயவரிடம் மிகப்பெரிய கலங் கேட்டாள். கணவனோடு தானும் புதைபடுவதற்காகப் பெரிய கலத்தினைக் கேட்டாள்.

"கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே
... ...
வியன்மல ரகன்பொழி லீமத் தாழி
அகலி தாக வனைமோ"

என்பது அப் பெண்ணின் வேண்டுகோளாக அமைகிறது. [15] கணவனின் இறப்பிற்குப் பின்னர் பெண்கள் தீயில் எரிந்தோ, மண்ணில் புதைந்தோ 'கைம்மை நோன்பை' முடித்தனர்.

அகப்பாடலில் கைம்மைக் கொடுமை

இரவில் தலைவன், தலைவியைச் சந்திக்க வருகின்றான்.

களவின்பத்தில் மிகுதியும் விருப்புடைய தலைவன் செயலைத் தோழி வரைவுகடாதல் காரணமாய்க் கண்டிக்கின்றாள். கடுமையான ஆபத்துக்களுக்கிடையே 'வாரற்க' என்கிறாள். இவ் ஆபத்து பற்றிக் கூறுகையில் தலைவன் நாட்டில் உள்ள குரங்கின் செயலை எடுத்துக் காட்டுகிறாள். ஆண் குரங்கு இறந்து பட்டதும், பெண் குரங்கு தன்னுடைய குட்டியினை உறவினரிடம் ஒப்படைத்து விட்டுக் 'கைம்மை நோன்பின்' துயர் தாள முடியாமல் அல்லது அடைய விரும்பாமல் மலையின் உச்சியினின்று கீழே பாய்ந்து தன்னுயிரினைப் போக்கிக் கொண்டது.

"கருங்கன் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செருக்கும்"

என்ற இவ் அகப்பாடல் அடிகளில் ஐந்தறிவுடைய குரங்கின் செயல் மீது சங்க கால மகளிரின் நிலை ஏற்றிக் கூறப்பட்டுள்ளது.[16] கைம்மை நோன்பு கொடுமையானது என்பதும், இந் நோன்புக் கொடுமையினின்று மீள உயிர் துறத்தலைத் தீர்வாகக் கொண்டமையும் வெள்ளிடை மலையாகிறது.

உடன் கட்டை ஏறக் காரணம்

ஒத்த அன்புடையவராய் நாளும் நல்லறமே செய்து வாழ்வது இல்லறம். இவ் இல்லறத்தில் இன்ப துன்பங்களைத் தங்களுக்குள் சமமாய் பங்கிட்டுக் கொளல் வேண்டும். ஒரு சாராருக்கு மட்டும் ஒன்று உயர்ந்தோ குறைந்தோ இருத்தல் கூடாது. அங்ஙனம் இருப்பின் அன்பு வழிப்பட்ட, அறவழிப்பட்ட சமநிலை இல்லை. சங்க காலந்தொட்டு இக் காலம் வரை துன்பங்கள் எப்பொழுதும் பெண்களின் அனுபவச் சொத்தகவே விளங்குகின்றன. திருமணச் சடங்கில் 'அம்மி மிதித்தல்' என்ற சடங்கு ஒன்றுண்டு. அம்மி எதற்காக மிதிக்கப்படுகிறது? கணவனுடைய வாழ்க்கைப் பாதை கரடு முரடானதாக இருந்தாலும் இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக் கொண்டு மனைவி கணவனோடு செல்லுதல் வேண்டும். இச் செய்தியைத்தான் 'அம்மி மிதித்தல்' என்ற சடங்கு உள்ளடக்கியிருக்கின்றது. "எத்தகைய துன்பங்கள்

வந்தாலும் கல் போல உறுதியாக இருந்து செயல்பட வேண்டும்" என்றும் கூறுவர். பெரும்பாலும் பெண்ணுக்கே இதுபோன்று பல அறிவுரைகள் கூறப்படுகின்றன. ஆணுக்கு இத்தகைய அறிவுரை கூறும் சடங்கு இல்லை. கணவன் இறந்த பிறகு பெண் (மனைவியை) 'கைம்பெண்', 'விதவை' என்ற சொற்களால் குறிக்கப்படுகின்றாள் ; வெண்ணிற ஆடை உடுத்துகின்றாள். ஆனால் மனைவியை இழந்த கணவனை இதுபோன்று அடையாளங்காட்டக்கூடிய சொல்லோ, ஆடையோ ஒன்றுகூட நடைமுறையில் இல்லை என்பது கருதத்தக்கது.

சங்க காலத்தில் ஆடவர் நிலையில் மாற்றம் இல்லை. ஒத்த அன்புடையவரில் கணவன் இறப்பின் மனைவியே பல துன்பங்களைப் பெறுகிறாள். நல்ல உணவில்லை ; படுக்கையில்லை ; அணிகலன்கள் இல்லை. கூந்தலை இழந்து கண்ணீர் மல்க, கணவன் உயிர் நீத்த இடத்தினை மெழுகி, விண்ணு லகில் (?) வாழும் கணவனுக்கு உணவு படைத்து வாழும் வாழ்க்கை நரக வாழ்க்கையாகத்தான் இருந்தது. மனைவி இறந்த பிறகு கணவனுக்குக் கட்டுப்பாடுகளை விதித்த விதிமுறைகளும் இல்லை. மனைவி இறந்த பிறகு எந்த ஒரு கணவனும் தலைமயிரை மழித்துக் கொண்டு நீர்ச்சோறுண்டோ, புல்லரிசிச் சோறுண்டோ வெறுந்தரையில் படுத்துறங்கியோ மனைவி இறந்த இடத்தினை மெழுகியோ விண்ணுலகில் (?) வாழும் மனைவிக்கு உணவு படைத்தோ நோன்பிருப்பதில்லை. மீறி மீறிப்போனால் கொஞ்சம் வருத்தப்பட்டிருக்கலாம். கைம்மை நோன்போ, உடன்கட்டை ஏறலோ கணவனுக்குச் சமூக நீதியாக வற்புறுத்தப்படவில்லை. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, தன் பெருங்கோப்பெண்டு இறந்த பொழுது,

"யாங்குப்பெரி தாயினு நோயள வெனைத்தே
உயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையிற்
கள்ளி போகிய களரி மருங்கின்
வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்து

ஒள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை
இன்னும் வாழ்வல் என்னிதன் பண்பே"

என்று வருந்த மட்டுமே முடிந்தது.[17] இதற்குக் காரணம் ஆணாதிக்கச் சமுதாய அமைப்பே ஆகும்.

இத்தகைய ஆணாதிக்கச் சமுதாயத்தை நேரடியாக எதிர்த்துப் போராடும் ஆற்றல் பெண்ணுக்கு இல்லை. அல்லது இல்லாத நிலை ஆக்கப்பட்டிருந்தது. கடுமையான நோன்புகளை மேற்கொண்டு ஆணாதிக்கச் சமுதாயத்தில் வாழ்வதை விட உயிர் துறப்பதே மேல் என்ற முடிவையே சங்ககால மகளிர் மேற்கொண்டனர். அக் காலச் சமுதாயத்தின் மீது தங்களது எதிர்ப்புணர்வைக் காட்டும் நிகழ்ச்சியாகவே உடன்கட்டை ஏறுதலைக் காணமுடிகிறது. 'சுக வாழ்வு' வாழுகிற அரசப் பரம்பரையில் தோன்றிய பூதப் பாண்டியன் மனைவிக்கும் இதில் விலக்கு இல்லை. பிற்காலத்தில் சமயச் சாயம் பூசப்பட்டு 'வீடுபேறு' அடையும் வழியெனத் திரிக்கப்பட்டது. 'விடுபேறு' மனைவிக்கு மட்டுமே ; கணவனுக்கு இல்லை. இத்தகைய உரிமைச் சமச் சீரற்ற சமுதாய அமைப்பே, சங்க கால மகளிர் 'உடன் கட்டை ஏறல்' என்ற பிற்போக்கான முடிவினை எடுக்கக் காரணமாயிற்று.

நிறைவுரை

சங்க கால மகளிர் அரசியல், தூது, கல்வி, கள்ளுண்ணல் போன்ற சமூகச் செயல்பாடுகளில் ஆண்களுக்கு நிகராகக் கருதப்பட்டனர். ஆனால் கணவனை இழந்தபிறகு பெண்கள் 'கைம்மை நோன்பு' என்ற கொடுமையினை அனுபவித்தனர். ஆண்களுக்குச் சமமான செயல் ஆற்றல் கைவரப் பெற்றிருப்பினும், கணவனை இழந்த பிறகு கணவரோடு பொருந்திய சிறப்புடன் வாழ வகையற்றவராயினர். ஏனெனில் கணவனை இழந்தபிறகு வாழும் பெண்ணின் வாழ்வுநெறி இயல்பானதாக இல்லை. களவொழுக்கத்திலும் கற்பொழுக்கத்திலும் தலைவனை விமர்சிக்கிற தலைவி, கணவன் இறந்தபிறகு தன்னை வருத்திக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டாள். இது தலைவன் மீதுள்ள அன்பின் மிகுதி எனக் கொள்ள இயலாது. பெண்களின் மீது சுமத்தப்பட்ட பிற்போக்குத் தனமான இம் முடிவு அக்காலச் சமுதாயத்தைப் பழி வாங்குவதாகவே அமைகின்றது.

குறிப்புகள்

1. பட்டினப்பாலை 106 - 109 ; புறநானூறு 235
2. புறநானூறு 95
3. புறநானூறு 246 : 5 - 9
4. புறநானூறு 248 : 3 - 5
5. புறநானூறு **234 : 2 – 4**
6. புறநானூறு 249 : 10 - 14
7. க.த.திருநாவுக்கரசு – தமிழ்நாட்டு வரலாறு – சங்க காலம் (வாழ்வியல்) ப. 210
8. புறநாறு 250 : 4 - 5
9. புறநாறு 253 : 5, 254 : 4
10. புறநாறு 261 : 18 - 20
11. புறநாறு 280 : 11 - 14
12. **சிலப்பதிகாரம் : துன்பமாலை : 35 - 45**
13. புறநாறு : 247
14. புறநாறு 246 : 1 - 3
15. புறநாறு : 256
16. குறுந்தொகை : 69 : 1 - 4
17. புறநாறு 245

****

சித்தாந்த நூல்களில் ஒட்டணி

முனைவர்.ச.நடாசன்

முன்னுரை

கவிஞர்கள் கவிதைகளை அழகுறுத்தவும், தாங்கள் சொல்லஎடுத்துக்கொண்ட பொருளைப் புலப்படுத்தவும் அணிகளைக் கையாளுகின்றனர். அவற்றில் தாயணியாகிய உவமை அணி, உருவகம், ஒட்டணி, பிறிதுமொழிதல் அணி, வேற்றுப்பொருள் வைப்பணி, குறியீடு போன்ற பல்வேறு வடிவங்களில் அமைகின்றது. இக்கட்டுரையில் சைவசித்தாந்த நூல்காளகிய திருஉந்தியாரிலும், திருவருட்பயினிலும், நெஞ்சுவிடுதூதிலும் ஒட்டணி பயின்றுள்ளமை விளக்கப்படுகின்றது.

ஒட்டணி

கருதிய பொருடொகுத் ததுபுலப் படுத்தற்
கொத்ததொன் றுரைப்பின ஃ தொட்டெடன மொழிப

(தண்டியலங்காரம், நூ. 52)

என்னும் நூற்பாவில் கவிஞன் தான் கருதிய பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்தற்குத்தக்க வேறொன்றினை விளம்புதல் ஒட்டணி என்று உரைக்கப்பட்டுள்ளது. அதனை உவமப்போலி என்றும் பிறிதுமொழிதல் அணி என்றும் அணி இலக்கண நூலார் கூறியுள்ளார். இதில் உவமையணியின் நான்கு உறுப்புகளின் உவமை மட்டுமே கூறப்படும்.

திருஉந்தியார்

இந்நூலிலுள்ள,

வித்தினைத்தேடி முளையைக் கைவிட்டவர்
பித்தேறி னார்களளென் றுந்தீபற
பெறுவதங் கென்பெண்ணே யுந்தீபற

(திருஉந்தியார், பா. 2[illegible])

என்ற பாடலில் ஒட்டணி பய[illegible]ளது. அஃதாவது 'வித்து' என்ற உவமைக்குத் 'திருவருள்' என்றும், தேடுதல் என்ற சொல்லுக்குச் சரியை கிரியை யோகங்களால் முயலுதல் என்றும், 'முளை' என்பதற்கு வீடாகிய திருவருட்பயனை அளிக்கும் ஞானம் என்றும், 'கைவிட்டனர்' என்பதற்குச் சரியை கிரியை முதலியவைகளைப் பயின்று பயன் விளைப்பதாகிய ஞானத்தை

இழந்தவர் என்றும் ; 'பித்தேறினார்' என்பதற்கு ஆணவம் கன்மம் மாயையாகிய மும்மலங்களின் தாக்கத்தால் மயங்கினார் என்றும், 'பெறுவது அங்குஎன்? என்ற தொடருக்கு ஞானத்தைக் கைவிட்டுச் சரியை கிரியைகளால் பெறும் பயன் என்? ஒன்றுமில்லை என்று பொருள் கொள்ளுதல் வேண்டும்.

அடுத்து

பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அத்கொழு நீயறிந் துந்தீபற
அறிந்தறி யாவண்ணம் உந்தீபற

(திருஉந்தியார், பா. 38)

என்ற பாடலில் ஒட்டணி பயின்றுள்ளது. இப்பாடலிலுள்ள பொற்கொழு என்பதற்குச் சிவஞானம் என்றும், வரகு என்பதற்கு அநித்தியமாகிய உலகியற்செல்வம், சித்திகள் என்றும், உழுவது என்பதற்கு உலகியற்பயனை அடையமுயல்வது என்றும், என்? என்பதற்கு எவ்வளவு அறியாமை? என்றும், அக்கொழு என்பதற்கு வீடுபேறு தருவதற்குரிய திருவருள்ஞானம் என்றும், நீ அறிந்து என்பதற்கு நித்தியமானது என்று தெளிந்து பேணிக்கொண்டு என்றும், அறியாவண்ணம் என்பதற்கு ஆணவமும் மாயையும் அறியா வண்ணம் என்றும், அறிந்துபற என்பதற்குப் பொற்கொழுவே பெறுதற்குரிய பேறு என அறிந்து கொள் என்றும் தத்துவப் பொருள் ஒட்டாகப் பதிந்து கிடப்பதை உணர்ந்து கொள்ளலாம்.

ஒருவன் வைத்திருந்த பொருளைப் பிறன் ஒருவன் வஞ்சித்து அதனைக் கவர வேண்டுமானால் அப்பொருளுக்குரியவன் உறங்கியிருக்க வேண்டும் அல்லது அவன் எங்கேயாவது சென்றிருத்தல் வேண்டும் என்னும் உவமையிலிருந்து திருவருளைச் சாராமல் வேறெந்த வழியாலும் இறைவன் பேரின்பத்தைப் பெறஇயலாது என்ற கருத்தை அறியலாம். இது,

வஞ்சமுடன் ஒருவன் வைத்த நிதிகவரத்
துசினனோ போயினனோ சொல்

(திருவருட்பயன்.பா.66)

என்னும் பாடலில் ஒட்டணியாக வைத்துக் கூறப்பட்டுள்ளது.

கதிரவன் உச்சியில் வரும்பொழுது தூணின் ஒளி கதிரவன் ஒளியில் மறைய அது முழுவதும் கதிரவனின் ஒளிமையமாகக் காட்சி அளிக்கும்.

இவ்உண்மை சிவபோதம் ஆன்மாவை முற்றிலுமாகக் கவர்ந்து தன்னுள்ளே அடக்கும்போது ஆன்மா சிவமயமாகிறது என்ற கருத்தை உள்ளடக்கி ஒட்டணியாக,

தனக்கு நிழல் இன்றாம் ஒளிகவரும் தம்பம்
எனக்கவர நில்லாது இருள்

(திருவருட்பயன், பா.67)

என்னும் பாடலில் அமைந்துள்ளமையைக் காணலாம்.

கதிரவன் தோன்றிய பின் செல்பவர் இன்பம் அடைவர் ; தோன்றுவதற்கு முன் இருளில் செல்பவர் துன்பம் அடைவர். அதுபோல ஆணவமலத்தை அகற்றும்பொருட்டுத் திருவருளின் பின்செல்பவர் இன்பமும், முன்செல்பவர் துன்பமும் அடைவர் என்னும் கருத்தை,

இன்புறுவார் துன்பார் இருளின் எழும்சுடரின்
பின்புகுவார் முன்புகுவார் பின்

(திருவருட்பயன், 71)

என்னும் பாடலில் ஒட்டாக அமைந்திருத்தலைக் காணலாம்.

பெண்டிர் இருவர் தம்முள் கூடுவதால் இன்பமடையார். ஓர் பெண்ணும் ஓர் ஆணும் கூடுவதாலேயே இன்பம் அடைவார். அவ்வாறே ஆன்மா அருளைப் பெறுவதால்மட்டுமே இன்புறாது சிவத்தோடு கூடினால் தான் இன்பமடையும் என்பதை,

இருவர் மடந்தையருக்கென்பயன், இனியுண்டாம்
ஒருவன் ஒருத்தியுறின்

(திருவருட்பயன்,72)

என்னும் பாடல் விளக்குகின்றது.

யாழ்ப்பாணரின் இசைக்கு உருகி, மழையும் குளிரும் தாக்காதவாறு இறைவன் அவருக்குப் பலகையிட்டருளினான். அதுபோல ஆன்மாவை ஆணவமலம் தாக்காத வண்ணம் ஆண்டவன் அருள்செய்வான் என்னும் உண்மையை,

காணக்கிடையாதான் காண்பார்க்குக்காட்சியான்
பாணர்க் குருகிப் பலகை இட்டனன்

(நெஞ்சுவிடு தூது, கண்ணி. 102)

என்னும் அடிகள் விளக்குகின்றன.

திருவருட்பயன்

ஒளியும் இருளும் உலகும் அவர்கண்
தெளிவு இல்எனில் என்செய

(திருஉந்தியார், பா. 16)

என்ற பாடலில் கண்ணிடத்தில் காணும் ஆற்றல் இல்லாவிடத்தில் ஒளி, இருள், உலகு முதலியன இருந்தும் அவற்றை அக்கண்ணால் காணஇயலாது என்ற உவமை ஒளியாகிய சிவமும், இருளாகிய மலமும், உலகமாகிய மாயையும் தெளிவாக இருந்தாலும் உயிர்களிடத்தில் இச்சை, ஞானம், கிரியையாகிய அறிவின்றேல் அவற்றை அவ்உயிரால் அறிய இயலாதென்ற பொருளை விளக்குகின்றது.

ஒரு வீட்டில் ஒருவர்கொண்ட நோயை அவ்வீட்டிலுள்ளாரே நன்கு அறிய இயலும் ; அயலார் அறியஇயலாது என்ற உவமை உயிரைப் பிணித்துள்ள ஆணவமலம் என்னும் நோயை உயிர்க்குயிராய் நின்று உயிரை இயக்கும் ஒப்பற்ற இறைவன் அறிவதன்றிப் பிறிதொன்றால் அறிய இயலாது என்ற பொருள் அடக்கி நிற்கின்றது என்பதைப் பின்வரும்,

அகத்துஉறு நோய்கு உள்ளிரை அன்றிஅதனைச்
சுகத்தவரும் காண்பரோ தான்

(திருவருட்பயன், பா. 42)

என்ற இந்தச் செய்யுள் ஒட்டணியாகநின்று உணர்த்துகிறது. பித்தநோய் உடையார்தம் நாக்கிற்கு இனிக்கும் பாலும் கசக்கும். அந்நோய் நீங்கியபின் கசந்த பாலும் இனிக்கும். உயிர் ஆணவமலத்தைப் பெற்றிருக்கும் காலத்தில் துன்பமாகத் தோன்றிய மறைப்பாற்றல் ஆணவமலம் அகன்றபின் ஆன்மாவுக்கு அளவற்ற பேரின்பத்தை அளிக்கும் அருளாற்றலாக மாறும் என்ற தத்துவக்கருத்தை

தித்திக்கும் பால்தானும் கைக்கும் திருந்திடும் நாப்
பித்தத்தில் தான்தாவிர்ந்த பின்

(திருவருட்பயன், பா.62)

என்னும் பாடல் உள்ளடக்கி நிற்கின்றது.

இங்ஙனம் ஒட்டணியைக் கொண்டு புலவன் தான் கருதிய பொருளைப் புலப்படுத்தலைக் காணலாம். சித்தாந்த நூல்களில் பயின்றுவரும் அணிகளுள் இவ்ஒட்டணி குறிப்பிடத்தக்க அளவில் பயின்றுவருவதைக் காணலாம்.

சிவலோகம், வைகுண்டம் உண்மையே !

முனைவர்.கு.சௌந்தரபாண்டியன்,
எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி.,
காப்பாட்சியர்,
அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகம்,
சென்னை – 5.

"அவர் சிவலோக பதவி அடைந்து விட்டடார் " – எனச் சைவர்களும்

"அவர் வைகுண்டம் அடைந்தார்" என வைணவர்களும் எழுதுவர்.

சிவலோகம் எங்கே உள்ளது?

வைகுண்டம் எங்கே உள்ளது?

ஏதோ கண்ணுக்குத் தெரியாதபடி, எட்டாத உயரத்தில், வானத்தில் இவை இருப்பதாக மதவாதிகள் கூறிவருகின்றனர்.

இங்ஙனம் கூறுவது தவறானதாகும்.

சிவலோகம், வைகுண்டம் என எங்குமில்லை என்பார் கூற்றும் தவறே!

அந்தக்காலத்து மயானங்களை நம் கண்முன் கொண்டுவந்தால், சிவலோக, வைகுண்ட உண்மை புலனாகும்.

சிவனது குறிஞ்சி நிலச் சரிவில், அதனை அடுத்து வாழும் மக்கள் சடலங்களை எரித்தனர் அல்லது புதைத்தனர்.

எனவே, அப்பகுதியில் இறந்தோர்—'சிவலோகம்'—எனப்படும் மயானத்தினை அடைந்தனர் என்று, தொடக்கநாளில், குறிக்கப்பட்டனர்.

பின்பு, இந்த உண்மைப் பொருளைப் பின் சந்ததியினர் அறியாமல் போகவே, 'சிவலோகம்' என்றால், என்னவோ ஏதோ என்று கருதும் நிலை ஏற்பட்டுவிட்டது !

சிவன், குறிஞ்சிக் கடவுள் என்பதை, "சிவன் கைலாயமலை வாசி" என்றும், "பருவதராசன், தன் மகளைச் சிவனுக்குக் கொடுத்தான்" எனவும் வரும் புராணக் குறிப்புகளால் உய்த்துணரலாம்.

முல்லைநிலத்தே வாழ்ந்த மக்களும், பிறரும், முல்லையில் ஒரு பகுதியாகிய ஆற்றையொட்டிய மயானங்களில் சடலங்களை எரித்தனர் அல்லது புதைத்தனர்.

இந்தக் காரணத்தால், முல்லைநில மக்கள், ஒருவர் இறந்துவிட்டால், "அவர் வைகுண்டம் அடைந்தார்" என்று கூறினர்.

வை – நுனி ; வைக்கோல் என்ற சொல்லில் இதனை உணரலாம். ஆற்றின் நுனிப்பகுதி, வைகுண்டம்.

வை குண்டம் – வைகுண்டம்

குண்டம் – குழி

குண்டு + அம் – குண்டம் ; அம் – சாரியை.

"குண்டுங் குழியுமாக இருக்கிறது" – என்ற வழக்கையும் நோக்கலாம்.

குண்டு அல்லது குண்டம் என்பது, இங்கே ஆறு, ஓடை, ஏரி முதலியவற்றைப் பொதுவாகக் குறிக்கும்.

ஆதலால், இப்படிப்பட்ட நீர் நிலைகளின் அருகே, ஊரின் புறத்தே, இருந்த மயானமே 'வைகுண்டம்' எனப் பழைய நாளில் அழைப்பட்டிருத்தல் வேண்டும். அந்த இடத்தில் எரிக்கப்பட்டோர் அல்லது புதைக்கப்பட்டோர் "வைகுண்டம் அடைந்தவர்" என்றால் அது உண்மைதானே?

முல்லைநிலத்து ஆயர்கள், கிருஷ்ணனை வழிபட்டதனால், வைணவர்கள் ஆயினர் ; அதனால்தான் வைணவர்கள் மட்டும் "வைகுண்ட பதவி" என்று குறிக்கும் ஒரு மரபு நிலைத்துவிட்டது.

திருவள்ளுவர் ஒரு சட்ட நிபுணர்

வி.கார்த்திகேயன், B.Sc., M.A., C.Lib.sc., C.V.G.,
19, முத்துக்காளத்தி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 5.

மனிதத் தன்மையிலும் தரத்திலும் மாறுபட்ட தன்மையினராகவே மக்கள் அனைவரும் வாழ்கின்றனர். எல்லா உயிர்களும் சட்டத்தின் முன் சமம் என்று சொல்லும் இவ்வேளையில் ஒரு சில காரணங்களால் அந்த அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கேற்பச் சட்டங்களும் இயற்றுவதையே 'பகுதியால் பாற்பட்டு ஒழுகுதல்' என அழைக்கிறார் திருவள்ளுவர். இதுவும் நடுவு நிலைமைக் கொள்கையின் ஒரு கூறாகும். ஏனென்றால் மக்களின் தன்மைக்கேற்பச் சட்டம் நெகிழ்ந்து கொடுப்பது நடுவு நிலைமையிலிருந்து தவறுதல் என்பதாகாது. நாணல் காற்றுக்கேற்றபடி வளைந்து நெளிந்து கொடுப்பதால் தன்னை அது காத்துக் கொள்கிறது. அதுபோலத்தான் சட்டங்களும் அனைத்துத் தரப்பினருக்கும் சாதகமாக அமைப்பதால் அது நடுவு நிலைமையிலிருந்து பிறழ்ந்துவிட்டது என்று எண்ணுவது தவறாகும்.

பல்வேறு மதத்தினர், இனத்தினர் வாழும் இந்நாட்டில் அவரவர் உரிமைகளை, மதக்கொள்கைகளைப் புறக்கணிக்காமல் மதிப்புக் கொடுத்து அதற்கேற்ப அனைத்துத் தரப்பினரையும் மனநிறைவு செய்யும்படிச் சட்டங்கள் இயற்றுவதே சரியானதாகும். உலகத்திற்குப் பொதுமறையை அளித்த தெய்வப்புலவர் திருவள்ளுவர் 'பகுதியால் பாற்பட்டு ஒழுகுதல்' தவறாகாது என்பதைத் தன்னுடைய நீதிநூலாகிய திருக்குறளிலே ஆழமாகக் கூறியுள்ளார். நடுவு நிலைமை (அதிகாரம் – 12) என்ற அதிகாரத்தில் முதற் குறளாக கூறிப்பெருமை சேர்த்துக் கொண்டனர்.

"தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்" (குறள் – 111)

திருவள்ளுவர் ஆதரித்த 'பகுதியால் பாற்பட்டு ஒழுகுதல்' என்ற கொள்கையே இந்தியா போன்ற பல மொழிகள் பல்வேறு இனத்தவர்கள் பல்வேறு

மதத்தவர்கள் வாழும் நாட்டிற்குப் பொருந்தும். வேறுபட்ட மக்கட் பகுதியினரைத் தக்கமுறையில் நடத்தும் முறையையும் நீதி என்று சொல்வது பொருத்தமாகும்.

இந்திய நாட்டில் பல்வேறு இனத்தவர்கள் வாழ்கின்றனர். அவரவர் தகுதியைப் பொறுத்து இந்திய அரசு முன்னேறிய வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினர், மிகவும் பின்தங்கிய இனத்தவர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் என்னும் பல பிரிவாகப் பிரித்து அவரவர் தகுதிக்கேற்பச் சலுகைகள் வழங்கி அவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ளது. இது திருவள்ளுவரின் 'பகுதியால் பாற்பட்டு ஒழுகுதல்' என்ற கொள்கைக்குப் பொருந்துவதாகும். எப்படியென்றால், பாக்கிஸ்தான் போன்ற நாடுகளில் ஷியா, சன்னி என்ற இரு பிரிவினர் வாழ்கின்றார். ஒரு இனத்தவருக்கு அளிக்கும் சலுகை போல் இன்னொரு இனத்திற்கு அவர்கள் தகுதிக்கேற்ப வழங்காததால் இன்று அந்நாட்டில் உள்நாட்டுக் கலவரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் தம் மெய்யறிவால் உணர்ந்ததால் 'பகுதியால் பாற்பட்டு ஒழுகுதல்' வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். இன்றைய சட்டநெறிகளும் இதனையே பின்பற்றுகின்றன.

இந்தியச் சட்டம் போல் அல்ல ஆங்கிலச் சட்டம். ஆங்கிலச் சட்டத்தின் கீழ் ஒரே நிலையில் காணப்படுகின்றவரை கட்டுப்படுத்துகின்ற சட்டம் அரித்மேட்டிகல் இக்குவால்டி (ARITHMETICAL EQUALITY) என்றும், வேறுபட்ட நிலையில் உள்ளவர்களுக்கேற்ப அவர்களை கட்டுப்படுத்துகின்ற சட்டம் 'புரோபார்சனேட் இக்குவால்டி' (PROPORTIONATE EQUALITY) என்றும் அழைக்கிறார்கள். ஆனால் தென்னாப்பிரிக்கா போன்ற நாட்டில் சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் வேறுபட்ட நிலையில் உள்ளவர்களுக்கேற்ப உதவும் சட்டமான 'புரோபார்சனேட் இக்குவால்டி' சட்டம் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படாததால் அங்கு இனக்கலவரங்கள் தோன்றி உலகத்தையே தன்பக்கம் திருப்பின.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரையும், முன்னேறிய வகுப்பினரையும் நாம் சமமாக நடத்தினால் முன்னேறிய வகுப்பினர் தங்கள் திறமையால் முன்னேறவும், பின்தங்கிய வகுப்பினர்கள் இப்போதுதான் கல்வியறிவு பெறுவதால் அவர்களோடு இணையாகப் போட்டிபோட முடியாமல் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டும் விடுவார்கள். இதனையெல்லாம் கருத்தில் கொண்டே பின்தங்கிய வகுப்பினர்களும், மிகவும் பின்தங்கிய வகுப்பினர்களும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் சலுகைகள் ஏற்படுத்தி அதன் மூலம் அத்தரப்பினர் முன்னேறச் சமுதாயத்தில் வாழ வழிசெய்துள்ளார்கள். இது திருவள்ளுவர் சொன்ன " பகுதியால் பாற்பட்டு ஒழுகுதல் " ஆகும்.

மக்களுக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம், பாதுகாப்பு, உரிமைகள் ஆகியவையெல்லாம் சமமாகவும், பொதுவாகவும் வழங்கப்படுகின்றன. ஆனால், கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் மட்டுமே பின்தங்கிய வகுப்பினரை முன்னேற்ற இடவொதுக்கீடு, வயது வரம்பில் சலுகை, வேலைவாய்ப்புகள் என்று சலுகைகள் அளித்துள்ளனர். இவையெல்லாம் ஏன் அளிக்கிறார்கள் என்றால் அப்படியாவது கல்வியறிவைப்பெற்று வேலைவாய்ப்பைப் பயன்படுத்தி அனைத்துத் தரப்பினரும் முன்னேறி அதன் மூலும் நாட்டின் முன்னேற்றத்தில் அவர்களுடைய பங்கும் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தாலேயாம். இதுவே தகுதிக்கேற்ப ஒழுகும் முறையாகும்.

பல மதத்தினர் வாழும் இந்நாட்டில் அவரவர் மதத்திற்கு மதிப்புக் கொடுத்து மதச்சடங்கிற்கு முக்கியத்துவம் கொடுத்து சட்டங்கள் தகுதிக்கேற்றாற் போல் இயற்றப்படுகின்றன. இந்துக்கள் திருமணச் சடங்கிற்கு ஒரு சட்டமும், இஸ்லாமிய திருமணக் கொள்கைக்கு இன்னொரு சட்டமும், சீக்கியர்களின் மதக்கொள்கைகளைப் புறக்கணிக்காமல் அதற்கேற்ப சட்டங்களும் நெகிழ்ந்து அவரவர் உரிமைகளைப் பறிக்காமல் காக்கின்றன.

இவையெல்லாம் 'தகுதிக்கேற்ப ஒழுகும் முறையாகும். இது சரியாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பின்பற்றப்படாத காரணத்தினால் வெள்ளையர், கருப்பர் என்ற வேற்றுமையில் நிக்ரோக்களை அடிமையாக நடத்துகின்றனர்.

மக்களிடையேயுள்ள வேறுபாடுகளுக்கேற்ப இசைந்து ஒழுகுதல் அரசின் செயல்களுக்கு மட்டும் பொருந்துவதன்று. தனி மனிதர்களும் அத்தகைய இசைவுடன் ஒழுகினால்தான் அது 'பகுதியால் பாற்பட்டு ஒழுகுவதாகும்" மக்களின் தகுதிக்கேற்ப இசைந்து ஒழுகுதலையே தகுதி எனலாம். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் ஒன்றான ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திற்கு ஒரு சில சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டு இன்றும் அவை கடைப்பிடிக்கப்படுகின்றன. இச்சலுகை ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களுக்கு மனநிறைவை அளிக்கிறது. நடுவு நிலைமை என்பது சூழ்நிலைக்கேற்ப எல்லோரையும் சரிநிகர் சமானமாக எண்ணி வழிநடத்துவது. மக்களின் நிலைக்கேற்ப முறையோடு நெறியோடு பொருந்தி ஒழுகுவதாகும். மக்களின் வேறுபட்ட நிலைகளை ஆய்ந்து அவற்றிற்கேற்ப ஒழுக்கத்தை உறுதி செய்தல் எளிதான செயலாக எண்ண முடியாது. அதில் எண்ணற்ற சிக்கல்கள் எழக்கூடும். அச்சிக்கல்கள் எல்லாம் தீர்ந்து சரியாகச் சீர்செய்து செயலாற்றுவதே தகுதி என்ற தகைமையாகிறது. அதுவே நன்மைகள் விளைக்கும் நடுவு நிலையென்று திருவள்ளுவரின் திருக்குறளும் இன்றைய சட்டநெறிகளும் கூறுகின்றன. இம்முறையில் திருவள்ளுவர் ஒரு சட்டநிபுணர்ப என்று தெளிவாகப் புரிகிறது.

✧✧✧✧✧✧✧✧

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு.நா.கலியமூர்த்தி,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு.ச.இராமநாதன்,
முன்னாள் தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

திரு.த.கோ.ப.கோவிந்தசாமி, பி.காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு.கலைமாச்செல்வர் எஸ்.டி காசிராஜன், ஐ.ஏ.எஸ்.,
முன்னாள் அரசுச் செயலாளர், சென்னை.

திரு.சிலம்பொலி சு.செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி.,
சென்னை.

திரு.முனைவர்.கி.கருணாகரன்,
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு.முனைவர்.தமிழண்ணல், எம்.ஏ.,பிஎச்.டி.,
மதுரை - 625 020.

திரு.முனைவர்.மு.கோவிந்தராசன்,
சென்னை.

திரு.முனைவர்.சோ.ந.கந்தசாமி, எம்.ஏ.,பி.லிட்.,பிஎச்.டி.,
முன்னாள் இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு.முனைவர்.மா.இராமலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

திரு.தமிழ்த்தொண்டர் கோ.முத்துப்பிள்ளை, பி.ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர், சென்னை.

திரு.முனைவர்.ஈரோடு தமிழன்பன், எம்.ஏ., பிஎச்.டி.,
சென்னை.

திரு.பேராசிரியர் பி.விருத்தாசலம், எம்.ஏ.,
முன்னாள் முதல்வர், த.உ.க. கலைக்கல்லூரி.

திரு.முனைவர்.இரா.குருநாதன்,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு.புலவர்.செ.இராசு, எம்.ஏ.,
இணைப்பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

திரு.புலவர்.ஆ.பாலன், எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.
துணை முதல்வர், த.உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

திரு.புலவர்.மீனா.இராமதாசு, எம்.ஏ., எம்.எட்.,
முன்னாள் தலைமைத் தமிழாசிரியர், உ.மே. நி. பள்ளி

திரு.முனைவர்.பா.மதிவாணன், எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
தமிழ் விரிவுரையாளர், த.உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

Regd. No. TN/TJ/24

பெறுநர்

திருமிகு முனைவர். சி. சௌந்தரபாண்டியன் அவர்கள்

காப்பாட்சியர்

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள்

நூலகம்,

சென்னை - 5

ஆசிரியர்

தமிழ்ப்பொழில்,

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தஞ்சாவூர் - 613 002.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் ஆசிரியர் – ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ 100 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச் சங்க மணிவிழா மலர்	ரூ 80 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த.வே.உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ 60 00
இராசராசசோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ 6 00
பரணர் – ஆசிரியர். ஔவை சு.துரைசாமிப்பிள்ளை	ரூ 35 00
பாயிர விருத்தி – ஆசிரியர் அரசஞ். சண்முகனார்	ரூ 60 00
அறிவியல் தமிழ்	ரூ 125 00
எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர்	ரூ 100 00

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

29/7/98

வெளியிடுபவர் : திரு.நா.கலியமூர்த்தி தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருத்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : இரா.வைஜெயந்திமாலா, லக்மி பிரிண்டர்ஸ், ☎ 53141
1086, காக்கா வட்டாரம், தஞ்சாவூர் - 613 009.